# நீ ீ குழந்தை ஒன்றை எதிர்பார்கிறாய் என்பதுடன் ஜெர்மன் உனது தாய்மொழி இல்லை,அப்படித்தானே?



## ஊறி மாநிலத்தில் நாம் இதனை வழங்குகின்றோம்:

## உனது மொழியிலேயே பிரசவத்துக்கு தயார்ப்படுத்தும் கற நெறிகள்

அல்பேனியமொழி,அரேபியமொழி,போர்த்துகீசியமொழி, சேர்பிய பொஸ்னிய.˙.குரோசி மொழிகள், சோமலிய மொழி ,தமிழ்மொழி , டிரிக்ரினிய மொழி, துருக்கிய மொழி (வேண்டுமானால் வேறு மொழிகளும்)

## பிரசவத்துக்கு தயார் படுத்தும் கற்கைநெறியில் நான் எதிர் கொள்வதுஎன்ன?

இக் கற்கை நெறியானது ஜெர்மன் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத பெண்களை இலக்காகக் கொண்டிருப்பதுடன், தொலை தூரத்திலுள்ள தமது தாய்நாட்டிலிருந்து இங்கு வந்து ஊறி மாநிலத்தில் தாய்மையடைய இருக்கின்றீர்கள்.

இக் கற்கை நெறியில் உனது வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டு தெளிவு படுத்தப்படுவதுடன் நிச்சயமற்ற தன்மை இல்லாதொழிக்கப்பட்டு தகவல்கள் வழங்கப்படுகின்றன. எவ்வாறு கர்ப்பநதரிக்கப படுகின்றது மற்றும் மகப்பேறு நடைபெறுகின்றது என்பன பற்றி நாம் விளக்கிக் கூறுவோம். அத்துடன் பிரசவத்துக்கு தயார்ப்படுத்தும் முகமாகசுவாசப் பயிற்சிககளையும் உடற்பயிற்சிகளையும் கற்றறிந்து கொள்வோம். வார அட்டவணையை தயார்ப்படுத்துவதுடன் தாய்ப்பாலூட்டுதல் மற்றும் வீட்டுக்கு சென்றதும குழந்தையுடன் கழிக்கவுள்ள முதலாவது காலப் பகுதியையும் நாம் தயார்ப் படுத்துகின்றோம்.

இக் கற்கைநெறி சிறியதொரு குழுவாக நடைபெறும். இங்கு ந ீமற்றைய பெண்களைச் சந்திப்பதுடன் உனதுஅனுபவங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களையும் அவர்களுடன் பரிமாறிக்கொள்ள முடியும். பிரத்தியேகமானதும் கலாச்சாரவிழுமியங்கள்மற்றும் பழக்கவழக்கங்கள் என்பன இக் கற்கை நெறியில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும மற்றும் மதிக்கப்படும்..

இக் கற்கைநெறிக்கு 24வது மகப்பேறு வார்த்திலிருந்து செல்லுதல் சாலச் சிறந்ததாகும்.

### இக் கற்கை நெறியை தலைமை தாங்கி நடாத்துவது யார் ?

இக் கற்கை நெறியானது ஊறிச மருத்துவச்சிகள்,ரோமி வால்க்கெர்மற்றும் பியா பிராண்டிஆகிய இருவரினது தலைமையிலும் நடாத்தப்படுகின்றது.

மோழித தடங்கல்களைத் தவிர்க்கும் முகமாக இரண்டு மருத்துச்சிகளுக்கும் பன்னாட்டுக்கலாச்சார பெண் மொழி பெயர்ப்பாளர்கள் உதவி வழங்கி ஒத்தாசையாக இருப்பர்.

### எப்பொழுது கற்கை நெறி நடைபெறுகின்றது?

கற்கை நெறி நான்கு செவ்வாய்க் கிழமைகள்ல் பிற்பகலில் 14:00- 16:00மணிக்கிடையில் நடைபெறுகின்றது. கற்கை நெறிக்கான திட்டவட்டமானதேதிகள் ஒவ்வொரு கற்கைநெறியின் தேவைக்கேற்ப நிச்சயிக்கப்படுகின்றன.

### கற்கை நெறி எங்கே நடைபெறுகின்றது?

இக் கற்கைநெறியானது ஆல்ட்டோர்ஃப் ஸ்டட்டிலுள்ள ஊறி மாநில வைத்தியசாலையில் நடைபெறுகின்றது (www.ksuri.ch).

### இக் கற்கைநெறிக்கான செலவுஎவ்வளவு?

இக் கற்கைநெறிக்கான செலவு 80.00 சுவிஸ் பிராங்க்குள்ஆகும்.

இக் கற்கைநெறிக்கான ஏனைய செலவுகள் ஊறி மாநிலத்தின் ஒருங்கிணைப்பு தொடர்பு நிலையம்,ஊற ிசுகாதார ஊக்குவிப்பு நிலையம் மற்றும் மருத்துவக் காப்புறுதி போன்றனவற்றாலபொறுப்பேற்கப்படுகின்றன.

**கற்கை நெறி பற்றி உனக்கு வினாக்கள் உள்ளனவா?**

மருத்துவச்சிகள், ரோமி வால்க்கெர்அல்டலது பியா பிராண்டி உனக்குத் தேவையான தகவல்களை வழங்குவர்.

**ரோமி வால்கர்**



கைத்தொலைபேசி: 079 740 67 72
மின்னஞ்சல்: r.walker-arnold@bluewin.ch

**பியா பிராண்டி ºசயனெை**



கைத்தொலைபேசி:078 639 70 87
மின்னஞ்சல்ி: pia.prandi@gmx.ch

**இவ் வேலைத் திட்டம் பற்றிய வினாக்களுக்கு நாம் மனமுவந்துபதிலளிக்கத் தயாராகவுள்ளோம்:**


Kanton Uri
Bildungs- und Kulturdirektion
**Lena Greber**
Ansprechstelle Integration
Klausenstrasse 4
6460 Altdorf
Telefon: 041 875 20 66
E-Mail: lena.greber@ur.ch

Gesundheitsförderung Uri
Kantonale Fachstelle für Prävention und Gesundheitsförderung
**Simone Abegg**
Programmleiterin „Ernährung und Bewegung“
Gemeindehausplatz 2
6460 Altdorf
Telefon: 041 500 47 27
E-Mail: simone.abegg@gesundheitsfoerderung-uri.ch

ர்களது ஒன்றிணைந்த வேலைத் திட்டத்துடன்:

KANTON URI · gesundheitsförderung uri · KANTONSSPITAL URI

இந் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன்: Gesundheitsförderung Schweiz

# வேற்று மொழிப் பெண்களின் பிரசவத்துக்கு தயார்ப்படுத்தும் கற்கை நெறி

நீ குழந்தை (பிறப்பு) ஒன்றை எதிர்பார்த்து இருப்பதுடன் ஜெர்மன் உனதுதாய்மொழி இல்லை,அப்படித்தானே? ஊறி மாநிலத்தில் நாம் உனது (தாய்) மொழியிலேயே பிரசவத்துக்கு தயார் படுத்தும் கற்கை நெறியைவழங்குகின்றோம். பலகற்பிணிப் பெண்கள் 1 - 2 வெவ்வேறு மொழிகளில் பதிவுசெய்த உடனடியாகவே நாம் பிரசவத்துக்கு தயார்படுத்தும் கற்கை நெறி ஒன்றினை நடத்துவதுடன் மீண்டும் உன்னுடன் தொடர்பு கொள்வோம். இதற்கென தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக உனது உடன்பாடு எமக்குத் தேவையாகவுள்ளது.

☐ பிரசவத்துக்கு தயார் படுத்தும் கற்கை நெறி ஏற்பாடு செய்தடவுடன்˙ என்னுடன் தொடர்பு கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன்.

பெயர் .................................................................... முதற்பெயர் ....................................................................

ீத/இல.................................................................... தபால சுட்டெண/இடம ....................................................

தொலைபேசி /கைத்தொலைபேசி..........................................................................................................................

பிரஜாவுரிமை.˙.பூர்வீகநாடு.........................................................................................................................

தாய்மொழி ...................................................................................................................................................

கணிக்கப்பட்டமகப்பேற்று நாள் .........................................................................................................................

அனுப்பிவைக்கும் நிலையம் ...........................................................................................................................

குறிப்புக்கள ................................................................................................................................................

.......................................................................................................................................................................

இடம/தேதி ............................................................ கையொப்பம ...............................................................

தயவுசெய்து இதை நிரப்பி கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்:

Kanton Uri, Bildungs- und Kulturdirektion

Lena Greber, Ansprechstelle Integration

Klausenstrasse 4, 6460 Altdorf

மின்னஞ்சல்: lena.greber@ur.ch / தொலைபேசி: 041 875 20 66